தமிழ்நாட்டு நாணயங்கள்

கருத்தரங்கு மலர்



முற்காலப் பல்லவர் நாணயம்

முதன்மை ஆசிரியர்
முனைவர் ரா. கண்ணன், பிஎச்.டி., இ.ஆ.ப.,
ஆணையர், அரசு அருங்காட்சியகங்கள்

தொகுப்பு ஆசிரியர்
திருமதி. இரா. சாந்தி
காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம்

©

வெளியிடுபவர்
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
அரசு அருங்காட்சியகங்கள்,
சென்னை–8.

தமிழ்நாட்டு நாணயங்கள்

கருத்தரங்கு மலர்

முதன்மை ஆசிரியர்

முனைவர். ரா. கண்ணன், பிஎச்.டி., இ.ஆ.ப.,

ஆணையர், அரசு அருங்காட்சியகங்கள்.

தொகுப்பு ஆசிரியர்

திருமதி. இரா. சாந்தி,

காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு,

அரசு அருங்காட்சியகம்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 16–12–99 அன்று நாணயவியல் பிரிவும்
சென்னை நாணயவியல் கழகமும் இணைந்து நடத்திய
கருத்தரங்கு சொற்பொழிவுகளின் தொகுப்பு.

வெளியிடுபவர்

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,

அரசு அருங்காட்சியகங்கள்,

சென்னை–8.

முதற்பதிப்பு : 1999
மறுமதிப்பு : 2007

©
அரசு அருங்காட்சியகம்,
சென்னை–8

விலை : ரூ. **75-00**

அச்சிட்டோர் : இராயப்பேட்டை, எழுதுபொருட்கள் மற்றும் அச்சு மற்றும் அதைச் சார்ந்த உபபொருட்கள் உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம்.
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை–14
தொலைபேசி : 2848 5670, 2848 1803

பொருளடக்கம்

		பக்கம்
அணிந்துரை	.....	4
Foreword	.....	5
ஆசிரியர் உரை	.....	6
Message	.....	7
அறிமுகவுரை	.....	8
Preface	.....	9
1. கொங்கில் ஒய்சளர் (போசளர்) காசுகள்	.....	11
2. வடஇலங்கையில் அரச தோற்றமும் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களும்	.....	16
3. பகோடா நாணயங்கள் – ஓர் ஆய்வு	.....	20
4. தஞ்சை இரகுநாத நாயக்கர் காசுகள்	.....	23
5. பிரகலாதன் கதை சொல்லும் 'இராணி மங்கம்மா' செப்புக்காசு	.....	26
6. 'உய்யக் கொண்டான்' பெயரில் இராஜராஜன் வெளியிட்ட அரிய பொற்காசு	.....	27
7 இரண்டாம் நரசிம்மவர்மனின் வெள்ளிக் காசு	.....	29
8. பல்லவர்களின் அரிய இரு நாணயங்கள்	.....	30
9. சங்க காலச் சேரனின் அரிய காசு	.....	33
10. தமிழகத்தில் ரோமானிய நாணயங்கள்	.....	34
11. Certain terms used to describe the conditions and parts of coins	.....	38
12. Unknown Exigency Salem Cash of English East India Company	.....	39
13. Metallography Index of Properity	.....	43
14. Pandya Ruler with a Surname "Chekaveera Raman"	.....	45
15. New finds of Coins of Arcot Nawab	.....	47
16. Forgotten mints of British East India Company in Tamilnadu	.....	50
17. Epigraphical Data on Monetary System in Madras Region	.....	54
18. காலம் தோறும் பணம்	.....	57
19. Synopsis (English version for the Tamil papers presented in Seminar)	.....	65

அணிந்துரை

அருங்காட்சியகங்கள் அறிவு வளர்ச்சி பரப்புவதற்கானவை. அருங்காட்சியகத்தின் கல்வி நிகழ்ச்சிகள் இவ்வறிவு வளர்ச்சிப் பணியில் பெரும்பங்கு வகிக்கின்றன. காட்சிப் பொருட்களைப் பற்றிய ஆய்வுகளை ஊக்குவிக்கும் வகையில் கருத்தரங்கம், கண்காட்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன.

சென்னை, அரசு அருங்காட்சியக நாணயவியல் பிரிவும், சென்னை நாணயவியல் கழகமும் இணைந்து 16.12.99 அன்று "தமிழ்நாடு நாணயங்கள்" கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு சென்னை அரசு அருங்காட்சியாக வெளியீடாக 2001–இல் மலர்ந்தது.

இந்நூலின் பிரதிகள் அனைத்தும் தீர்ந்து போனதாலும், ஆர்வலர்களிடம் வரவேற்பு இருப்பதாலும், மீண்டும் இவ்வாண்டு மறுபதிப்பாக மகிழ்வுடன் வெளியிடப்படுகிறது.

சென்னை.
தேதி : 14.2.2007

முனைவர் **ரா. கண்ணன்,** இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
அரசு அருங்காட்சியகங்கள்

Dr. R. Kannan, Ph.D., I.A.S.,
Special Commissioner and
Commissioner of Museums

Government Museum,
Chennai-600008
Off: 91-44-28193778

Foreword

Museums serve as a means of spreading knowledge because the exhibits provide 'sight, touch & feel' which is important in learning. Seminars and special exhibitions are an important device to spread awareness, provoke new thought and research.

The Numismatics section of the Government Museum, Chennai (Madras) in Collaboration with Chennai Coin Society conducted a special exhibition and seminar on *'Tamilnattu Nanayangal'* at the Museum Theatre on 16.12.1999.

This publication entitled *'Tamilnattu Nanayangal'* in Tamil (a few papers in English) - Proceedings of the above mentioned seminar Compiled by Tmt. R.Shanthi, Curator, Numismatics Section, Government Museum, Chennai and Edited by me, when I was Commissioner of Museums was brought out as a publication of Government Museum, Chennai in the year 2001.

Copies of the previous edition have been exhausted, which has proved that the papers presented in the seminar provoked further discussion, research and new lines of thought among the scholars and raised demand. Hence, the need was felt to bring out this book as a reprint this year.

RKannan

Chennai- 600008,
14th February 2007.

(Dr. R. Kannan, Ph.D., I.A.S.)

ஆசிரியர் உரை

சென்னை அரசு அருங்காட்சியகமும், சென்னை நாணயவியல் கழகமும் இணைந்து நடத்திய கருத்தரங்கிற்காக ஆய்வாளர்கள் அனுப்பிய கட்டுரைகளைத் தொகுத்து இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது. இக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள செய்திகள் நாணயவியல் ஆய்வினை ஊக்குவிக்குமென நம்புகிறேன். தமிழ்நாட்டில் சங்க காலம் முதல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பினி அரசு வரை, பல்வேறு காலங்களில் அரசுகள் வெளியிட்ட நாணயங்களைப் பற்றிய செய்திகள் பல இக்கட்டுரைகளில் கூறப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கை நடத்துவதற்கும், கருத்தரங்குக் கட்டுரைகளை நூலாக வெளியிடுவதற்கும் முனைந்து செயல்பட்ட சென்னை நாணயவியல் கழகத்தினருக்கும், இவ்வருங்காட்சியகத்தின் நாணயவியல் பிரிவிற்கும் எனது பாராட்டுகள்.

சென்னை.
தேதி : 16.12.99

ரா. கண்ணன், இ.ஆ.ப.,
ஆணையர்,
அரசு அருங்காட்சியகங்கள்

MADRAS COIN SOCIETY

Collectors of Papermoney, Coins and Medals

MESSAGE

It is a dream come true for me and other fellow members of the MADRAS COIN SOCIETY, when we came to know about the Seminar on NUMISMATICS. Since, 1992 when we conducted our FIRST coins exhibition with the active encouragement of the Govt. Museum, it was our desire to conduct a Seminar also along with such exhibition. When this was casually proposed to the Authorities, in one of the meeting, they showed keen interest and we all see the fruits of this labour.

My BEST WISHES to this longfelt Seminar on Numismatics here at Chennai. We purposely call our Hobby COIN COLLECTING so that it is simple enough to reach the youngsters. Our Coin Exhibition has opened many peoples boxes and brought out to the sunlight their coin collection. With THIS SEMINAR, I hope that MANY TALENTED COIN COLLECTORS will come forward and share their knowledge with others, who, otherwise are shy to come out.

Chennai,
Date : 16.12.99

D.H. RAO
President

அறிமுகவுரை

நாணயவியல் பிரிவும், சென்னை, நாணயவியல் கழகமும் இணைந்து சில ஆண்டுகளாக நாணயங்கள் கண்காட்சியை நிகழ்த்தி வருகின்றன. இதன் தொடர்ச்சியாக 1999–இல் கண்காட்சியுடன் ஒரு கருத்தரங்கையும் நடத்திடக் கருதி, அதில் இடம் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட எனக்கு ஊக்கமும், உதவியும் நல்கிய அருங்காட்சியக ஆணையர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., மற்றும் கல்விப் பிரிவு காப்பாட்சியர், திரு.க. இலக்குமி நாராயணன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இக்கருத்தரங்கிற்குத் தங்களது சிரமம் பாராது மிகக்குறுகிய காலத்தில் கட்டுரைகளை வழங்கிய நாணயவியல் ஆய்வாளர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இக்கருத்தரங்கு சிறப்பாக அமைய உதவிய சென்னை, நாணயவியல் கழகத் தலைவர், திரு. ஹேம்சந்தரராவ், பொருளாளர் திரு. சங்கரன் ராமன் மற்றும் இவ்வருங்காட்சியக சக காப்பாட்சியர்கள், அச்சகப்பிரிவினர், கணிப்பொறி உதவியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை.
தேதி : 16.12.99

இரா. சாந்தி
காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு

PREFACE

Government Museum, Chennai (Numismatic Section) in collaboration with the Madras Coins Society conducted a Seminar on Tamin Nadu Coins on 16.12.99. The Session was presided over by Dr. N. Sankaranarayana, the former Curator, Numismatic Section.

The papers presented in this seminar contain new discoveries and also fresh interpretations by scholars and by numismatists.

Thiru Sitaraman read a paper on "Coins of Thanjavur Raghynatha Nayak Kasu". It was very interesting to note that Raghunatha Nayak has issued coins in Telugu and Tamil and some have Gandabherunda (double-headed bird) motif.

The paper is of interest as it brings out the double-headed bird motif normally ascribed to the Vijayanagar period to the subsequent Nayak period.

Thiru Hariharayya Oruganti presented on the Forgotten Mints of British East India Company drawing attention to the Krishnagiri and Salem mints. He describes 26 varieties.

Thiru M.T.Karunakaran presented a paper in which he argued that since several Pandya rulers had an alias ending with Raman, there could have been a Pandya ruler with surname Chakaveeraraman.

Thiru Sankaran Raman presented a paper on "Raja Raja Chola Coins with Uyyakondan" (surname) according to him this is the first time that the title 'Uyyakondan' was discovered. To a query by the Commissioner, the speaker replied that 'Uyyakondan' meant 'Protector'. Thiru Arumuga Seetharaman stated that there was even a channel by the name in Trichy and the figure of the Ceylon man was a characteristic feature of all Rajaraja coins and therefore, the hypothesis was credible. Thiru Lakshminarayanan, Curator pointed that one swallow does not make a summer. The coin was purchased in the market of Madurai from nomadic Irula tribals. Dr. Sankaranarayanana intervened and stated that unless a lot of coins was found in Tirunelveli are found at one place it was difficult to make any concrete claim.

Thiru Pushparathinam read a paper on the coins of Pandya with three fish. Which according to him refers to Pandya influence in the Tamil Provinces in Sri Lanka. There were two rulers in Ceylon in 13th century AD of which one of them who ruled in North Ceylon was under the tutelage of the Pandyas of Madurai. Therefore, the coins have 3 fish motif. In Tirunelveli coins with 2 fish motif were found. This, accoridng to him, showed the tendency in conquered regions by the Pandyas. Therefore, the 3 fish motif showed the suzerainty of the Pandyas over North Ceylon. Tmt. Shanthi, the Numismatics Curator questioned that this might be due to trade and not sovereignty since even Roman coins are found in Tamilnadu. But the speaker stated the recovery in Tirunelveli to show the trend to add fish in the coins, which strengthened his surmise.

Selvi Bhavani made 'Panam' a presentation on the origin of the word. She said reference to the word 'Panam' are found in inseriptions. She said that a lot of information could be

pleaned from inscriptions. She referred to the denominations on gold and silver coin found in inscriptions. She traced it is origin to the 7th & 8th centuries AD. The Commissioner of Museums Mr. R. Kannan I.A.S. suggested that the world 'Panam' could be dervied from 'Kasyanapanam' in vogue even in the period of Chanakya as money. She stated that her paper was confined to the medieval period. She admitted that the term 'Kasyanapana' was used in the earliest periods to denote Punch Marked silver coins.

Thiru Jawahar Babu presented an interesting paper on the Salem Cash coins of the English East India Company. He stated that from the Bara Mahal records, it could be seen that they were minted in Salem Mint to tide over a temporary coin shortage. The design was by William Macleod, the then Assistant Collector of Salem. The denomination of '5 Kasu' was clearly inscribed on the copper coins for the first time. This fixed the weight to value ratio for the first time. He felt that deterioration in weight subsequently was the first attempt at token currency. The Commissioner of Museums questioned what was the exchange ratio between British pound sterling and Indian Rupee at 1798. He felt that this might have some relevance to the debasement of coins problem. The weight of the rupee in machine minting in the 19th century was 11.660 GMS, or 1 tola. The gold standard was in operation till 1914. Hence, to talk of token currency in the 18th century was premature. Thiru Jawahar Babu in replying said that he did not study the relation between the British pound sterling and the Indian rupee. All that he wish to state is the copper content for cash coins at the turn of 19th Century was much reduced (nearly to half). May be, because of the reduction of metal to the actual value, it speculate the beginnings of the token currency.

Tmt. Santhi, Curator, Numismatic Section presented a paper on Early Pallavas. It created a lot of discussion. thiru Pushparatinam during his argument said the coins with the same symbol as the then reigning sovereign power in India were available in plenty in Sri Lanka. But in this case he states that since King Vijaya uses the same symbols the logic cannot be extended to lion symbol coins as Pallava coins. The author supported her identification with symbol of lion and Bodhi tree, which were found in the Amaravathi Buddhist monuments are also found in a few coins of the Pallavas. Mrs. Santhi said the inscription and Buddhist literature attested to the some of the early Pallavas. Mrs. Santhi said the inscription and Buddhist literature attested to the some of the early Pallava rulers being followers of Buddhism. She felt that the coin would have been issued by the Early Pallavas of Kanchi.

Thiru Arumuga Seetharaman countered that on the basis of Metrology (metal medium of the coins). Further he stated that the electrum was not used in that particular period in Tamil Nadu. The Curator stated that the coin is made of copper and hence the argument does not hold good. The Lion motif is not chracteristic of the Pallava period. The speaker replied that since the rulers had names like Rajasimha the use of Lion motif by Pallavas couldn't be ruled out.

The session concluded with the vote of thanks by Tmit. Santhi.

17-12-1999

Dr. R. Kannan, Ph.D., I.A.S.,
Commissioner of Museums

கொங்கில் ஒய்சளர் (போசளர்) காசுகள்

*க.ஆ. திருஞானசம்பந்தம்**

பொன், வெள்ளி, செம்பு, ஈயக்காசுகள் பற்றிக் கூறும் நாணயவியல் தொல்லியல் வரலாற்றில் ஓர் அங்கம். இந்நாணயவியல் ஒரு நாட்டின் நாகரிகம் பண்பாடுகளை எடுத்தியம்பப் பயன்படும் அறிவியல் கருவூலம். நாநயம் (ஓசை) உடையது நாணயம் எனப் பெயர் பெற்றது போலும் ! நாணயம் என்னும் சொல்லாட்சி விஜய நகர நாணயங்களைக் குறிக்க முதல் முதல் முகிழ்த்தது எனக் கூறலாம்.

தமிழ் இலக்கியத்தில் 200க்கும் மேற்பட்ட சொற்கள் செல்வத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன. கி.பி. 17ம் நூற்றாண்டுப் 'பணவிடுதூது' நூல்களில் 64க்கும் மேற்பட்ட பணத்தின் மரபுப் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. அம்மரபுக் காசுகள் பல இன்று வழக்கொழிந்து போயின! ஒய்சள (போசள) வேந்தர்கள் : துவராபுரியைத் தலைநகராகக் கொண்டு கருநாடகச் சீமையை ஆண்டு ஒய்சள வேந்தர்களில் குறிப்பிடத்தக்கவர், ஸ்ரீ இராமானுசரால் சமண சமயத்திலிருந்து வைணவ மார்க்கத்தைத் தழுவியர். (பிட்டி தேவல்) என்னும் விஷ்ணுவர்த்தவன் (கி.பி. 1117 – 1137) தன் ஆட்சியில் பகை வேந்தர்களை வென்று, தம் வெற்றிச் சின்னமாக கன்னடப் பொறிப்புடைய 'தலக்காடு கொண்ட,' 'நுளம்ப வாடிகொண்ட,' 'மலேபொருளுகொண்ட' என்னும் மூவகைப் பொற்காசுகளை வெளியிட்ட பெருவேந்தனாகும். விஷ்ணுவர்த்தனுக்குப் பிறகு ஒய்சள நாட்டை ஆண்ட 2ஆம் வீரநரசிம்மனும் அவன் மகன் வீரசோமேசுவரனும் சோழ, பாண்டிய வேந்தர்களிடம் கொண்ட மண உறவு காரணமாகத் தம் மேலாண்மையை நிலை நாட்டவும் தமிழகத்தில் திருச்சிராப் பள்ளி மாவட்டத்துத் திருவரங்கத்துக்கு அண்மையில் உள்ள சமயபுரத்தில் (கண்ணனூர்க் கொப்பம் எனச் சுட்டப்படும் அப்பகுதியில்) 'விக்ரமபுரம்' என்னும் கோநகரை நிறுவினர்.

வீரசோமேசுவரன் (கி.பி. 1233–1264) போசளீசுவரம் என்னும் சிவன் கோயிலைச் சமயபுரத்தில் எழுப்பியவன். மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்காக 3ஆம் ராஜேந்திரனுடன் போரிட்டுப் பாண்டியனை அரியணையில் அமரச் செய்து 'பாண்டிய குலசம்ரக்ஷகன்' என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவன். வீர சோமேசுவரன் தன்னாட்சிக் காலத்தில் தன் ராஜ்யத்தை இரு கூறாக்கிக் கன்னடச் சீமையைத் தன் மகன் 3ஆம் நரசிம்மனுக்கும் கண்ணனூர்க் கொப்பம் உள்ளிட்ட கொங்குப் பகுதியைத் தன் மனைவி சோழ மாதேவியின் புதல்வன் வீர ராமநாதனுக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். இப்பெருவேந்தன் 'போசஸீஸ்வரம்', சிவன் கோயிலை எடுத்ததன் நினைவாக "போசளீசுவர் என்னும் தமிழ்ப்பொறிப்பை முகப்பில் கொண்ட செம்புக்காசினை வெளியிட்டான். அக்காசின் புறத்தில் மூவளைவின் கீழ் அங்குசச் சின்னமும், அதன் இருபுறமும் சந்திரனும், சூரியனும் அருகருகே இருபுறமும் விளக்கும் வெண் சாமரமும் அமைந்த செப்புக்காசினை வெளியிட்டான. இக்காசு வீரசோமேசுவரனுக்கு எனவும் அத்தமிழ்ப் பொறிப்பு கி.பி. 13ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்தமைதியைக் கொண்டது எனக் கணித்தறிந்தவர் திரு. ஐராவதம் மகாதேவன் என ஆறுமுக சீதாராமன்



3 வரிகளில் 'போ-ஸளீஸ்-வர' தமிழ்ப் பெயர்

முன்புறம்

(''A unique coin of the Hoysalas of the Tamil Country'') என்னும் கட்டுரையில் குறிப்பிடுவார். (Studies in South Indian Coins Volume VI Page No. 76)

---

* கொங்கு நாணயவியல் ஆய்வு மையம், ஈரோடு–3.



3 வளைவின் கீழ் 'அங்குச்சின்னம்' ஏனைய சின்னங்களுடன்
பின்புறம்

கண்ணனூர்க் கொப்பத்தில் காசுகளை அச்சடிக்கத் தம்பட்டம் என்னும் நாணய சாலையை வீரசோமேசுவரன் அமைத்தான் (ARE 257/1925) என்னும் குறிப்பு சோமேசுவரன் தமிழகத்தில் தமிழ்ப் பொறிப்புடைய காசுகளைச் செலாவணிக்கு வெளியிட்டிருக்கவேண்டும் என்னும் குறிப்பினை மெய்ப்பிக்கிறது".

வீரராமநாதன் : (கி.பி. 1254-1295)

வீர சோமேசுவரனுக்குப் பின் அவன் மகன் வீரராமநாதன் கண்ணனூர்க் கொப்பத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்டான். மாறவர்மன் குலசேகர பாண்டியன் வீரராமநாதனுடன் போரிட்டுக் கண்ணனூரைக் கைப்பற்றவே வீரராமநாதன் பாண்டியனின் மேலாண்மையை மேற்கொண்டு சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தன்னாட்சியை நிலைநிறுத்தி, கண்ணனூர்ப் பகுதியுடன், பெங்களூர், கோலார் பகுதியையும் தன் உடன் பிறந்தான் 3ஆம் நரசிம்மனுடன் பொருது கைப்பற்றி, நிர்வாகத் தலைநகராக கிருஷ்ணகிரி அருகே உள்ள "குந்தாணியை" அமைத்து, தமிழக போசள ராஜ்ஜியத்தை 40 ஆண்டு காலம் ஆண்டான். இம்மன்னனின் ஆட்சி வடக்கே பெல்லாரியிலிருந்து தெற்கே திருச்சிராப்பள்ளி வரை பரவியிருந்தது. கொங்கு நாட்டில் 150க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் வீரராமநாதனின் புகழ் பாடும்.

வீரராமநாதனின் காசுகள் :

இவன் தன் ஆட்சியில் பொன், வராகன், குந்தாணிப்பணம், சுத்த சலாகை, அச்சு ஆகிய பொற்காசுகளையும், குந்தாணிக் காசு, இராமகுந்தாகாசு ஆகிய செப்புக் காசுகளையும் வெளியிட்டுள்ளான், என்பதை அவன் வெளியிட்ட கல்வெட்டுக்களைக் கொண்டும், 'பூர்வகதா' என்னும் இசை நாடகம் கொண்டும் முடிவுக்கு வரலாம்.

தமிழகப் போசளர் காசுகள் அனைத்தும் இருபுறமும் அச்சடிக்கப்பட்ட காசுகள் எனலாம். ஒரு வராகன் பத்துப் பணத்திற்குச் சமம் ; பொன் செப்புக்காசுகளைத்தான் செலாவணிக்கு வெளியிட்டனன் போலும்.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கரூர் உள்ளிட்ட கொங்கு நாட்டில் உள்ள காசு சேகரிப்பாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற காசுகள் கொண்டு பின்வரும் முடிவுக்கு வரலாம்.

1. தமிழக ஒய்சள (போசள வேந்தர்களின் பொன், வெள்ளிக் காசுகள் இதுவரை புதையலாகவோ, அல்லது தரை மீதோ கிடைக்கப் பெறவில்லை. குந்தாணியில் தக்க அகழ் ஆய்வு மேற்கொண்டால் ஒரு வேளை கிடைக்கக்கூடும்.

2. செப்புக்காசுகள் :

முகப்பில் வலப்புறம் நோக்கி நிற்கும் யானையும் புறத்தில் மூன்ற வளைவின் கீழ் அங்குசம், இருபுறமும் சந்திர சூரியனுடன் ; அங்குசத்தின் இருமருங்கும் விளக்கும். வெண்சாமரமும் கொண்டுள்ள ஒரு செப்புக் காசு.

3. முகப்பில், அஞ்சலி தோற்றத்தில் நிற்கும் மன்னன்; தோள்மீது வில் புறத்தில் மூன்று வளைவுகள் உடைய திருவாசியின் கீழ் அமைந்த அங்குசமும், பல்வேறு சின்னங்களுடன் இச்செப்புக் காசில் காணும் அரசனின் உருவம் ஸ்ரீரங்கன் வேணுகோபாலன் சன்னதி மண்டபத்தில் உள்ள தூணில் அஞ்சலி தோற்றத்தில் காணும் வீரராமநாதனின் உருவத்தை ஒத்து இருக்கிறது. இச்சன்னதி வீரராமநாதனின் 15 ஆம் ஆட்சி ஆண்டில் கட்டப்பட்டது என்பதை ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது!

கல்வெட்டில் காசுகள்

1. வீர ராமநாதனின் பெருங்குடிக் கல்வெட்டிக் (திருச்சி மாவட்டம்) 3 கழஞ்சு பொன் குறிப்பு.

2. ஓசுர் ஈசுவரன் கோயில் போசளர் கல்வெட்டில் பொன்னும், கழஞ்சும் ஒரே மதிப்பும் நிலையும் உடையவை என்னும் குறிப்பு.

3. தர்மபுரி ஓசுர் கல்வெட்டில் சுத்தசலாகைப் பொன் பற்றிய குறிப்பு.

4. வாலிகண்டபுரக் கல்வெட்டில் வீரராமநாதன் ஆட்சியில் "சந்தியா தீபம்" வைக்க 7000 காசு முதலாக வைத்த செய்தி.

5. ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டில் நூறு ஆயிரம் காசுகள் நிலம் வாங்கத் தரப்பட்ட குறிப்புக் காணப்படுகிறது. காசுகள் பற்றிய குறிப்புக் கொண்டு வீரராமநாதனின் காலத்தில் செப்புக்காசுகள் செலாவணிக்கு மிகுதியும் வந்தன எனக் கருதலாம்.

6. அன்றாடு நடக்கும் செலாவணிக்கு 'அன்றாடு நற்காசுகள்' பற்றிய செய்தி திருவானைக்கா கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

7. ஒரு நந்தா விளக்கு எரிக்க ஒரு பொன் கொடுக்கப்பட்ட செய்தி (தர்மபுரிக் கல்வெட்டுத் தொகுதி–1– எண். 140)

8. ஒரு விளக்கு எரிக்க 2 பசுக்களும், 3 பசுக்களும் கொடுக்கப்பட்ட செய்தி (தர்மபுரி கல்வெட்டுத் தொகுதி–1 – எண். 140) மேற்கண்ட செய்தி கொண்டு ஒரு பொன்னுக்கு 2 அல்லது 3 பசுக்கள் வாங்கலாம் எனக் கருத இடமுண்டு.

9. அஞ்சு உதாரனும், அஞ்சு சுத்த சலாகையும் ஆகப் பொன் பத்து என்னும் கல்வெட்டுக் குறிப்புக் கொண்டு (1) ஊதாரன் (2) சலாகை (3) பொன் ஆக மூவகை பொற்காசுகள் ஒய்சாளர் (போசளர்) ஆட்சியில் செலாவணியாயின எனக் கூறலாம். (தர்மபுரிக் கல்வெட்டுகள் தொகுதி–2–எண். 71)

இலக்கியத்தில் காசுகள்:

ஒய்சள வீரராமநாதன் பற்றி வழங்கும் தாகலு மரபினர் நடித்துப் பாடும் "பூர்வகதா" இசை நாடகப் பாடல்களில் வரும் பின் வரிகள் கொண்டு,

"குந்தா குந்தா காசு
இராம குந்தா காசு
இந்தா இந்தா காசு
கீர குந்தா காசு".

எனச் சுட்டப்படும் பாடல், வீர நாமநாதனின் தலைநகர் 'குந்தாணி' என்பதும், அவ்வேந்தன் காலத்தில் 'குந்தாணிப் பணம்' குந்நதாணியில் காசடிக்கப்பட்ட செய்தியும், அவை அக்காலத்தில் மக்கள் மத்தியில் 'குந்தாணிக் காசு' என்னும் 'இராமனின் காசு' என்றும் வழங்கின என நாம் உய்த்து உணரலாம். ("தருமபுரி மாவட்டம் – புதிய ஆய்வுகள்" கட்டுரை ஆட்டம், பூரகதா – பக்கம் 61)

மூன்றாம் வல்லாளன் :

3ஆம் வல்லாளன் தமிழகத்தை (கி.பி. 1292–1345) ஒரு குடை கீழ் ஆட்சி செய்த ஒய்சள அரசர்களில் சாலச் சிறந்தவன். கொங்கு முழுவதும் தன் ஆளுகையில் கொணர்ந்தவன். அவன் அங்குச சின்னம் பொறிக்கப்பட்ட பல்வகை செப்புக் காசுகளை செலவாணிக்கு விட்டுள்ளான்.

கிடைத்த இடம்	வடிவம்	அளவு	நிறை	மாழை	அகம்	புறம்	வர்ணனை அகம்	வர்ணனை புறம்
1. கரூர்	வட்டம்	விட்டம் 1.6 செ.மீ. .3 செ.மீ. (பருமன்)	6 கிராம்	செம்பு			வட்டத்தில் "பொஸ மூன்று ளீசு வரிசை வர" தமிழ் எழுத்து	மூன்று வளைவுக்குள் அங்குசம் இருபுறம் சூரியன் சந்திரன்
2. கரூர்	வட்டம்	விட்டம் 1.5. செ.மீ. .2 செ.மீ. (பருமன்)	5 கிராம்	செம்பு			வட்டத்தில் கன்னட எண்கள் இடப்புறம் சூரியன், சந்திரன், அங்குசம்.	மூவளைவின் கீழ் அங்குசம் தலைகீழாக சூரியன், சந்திரன் மேலாக.
3. கரூர்	வட்டம்	விட்டம் 1.7. செ.மீ. .2 செ.மீ. (பருமன்)	5 கிராம்	செம்பு			வட்டத்தில் அஞ்சலிக்கும் மன்னன் தோளில் கார்திய அரசன் 'வீரராகூர்' நாதன்	மூவளைவின் கீழ் அங்குசம் வில் இருபுறம் சூரியன், சந்திரன்
4. கிருஷ்ணகிரி	வட்டம்	விட்டம் 1.6 செ.மீ. .2. செ.மீ. (பருமன்)	3 கிராம்	செம்பு			வட்டத்தில் வலப்புறம் யானை.	மூவளைவின் கீழ் அங்குசம் ஏனைய சின்னங்களுடன்.
5. காவேரிப் பட்டணம்	வட்டம்	விட்டம் 1.6 செ.மீ. .2 செ.மீ. (பருமன்)	3 கிராம்	செம்பு			சுதர்சன சக்கரம்	மூவளைவின் கீழ் அங்குசம்

கிடைத்த இடம்	வடிவம்	அளவு	நிறை	மாழை	அகம் புறம்	வர்ணனை அகம்	வர்ணனை புறம்
6. தர்மபுரி	வட்டம்	விட்டம் 1.5 செ.மீ. .2 செ.மீ. (பருமன்)	3 கிராம்	செம்பு		வட்டத்தில் தாமரை	மூவளையின் கீழ் அங்குசம்
7. 1 காவேரிப் பட்டணம் 2. பவானி	வட்டம்	விட்டம் 2.5 செ.மீ. .4 செ.மீ. (பருமன்)	4 கிராம்	செம்பு		கண்ட பேருண்டப் பறவை இரு அலகுகளில் யானைகளைக் கொத்திய தோற்றத்தில்	திரிசூலம் இருபுறம் சூரியன், சந்திரன், 'ராம' தமிழ்ப் பொறிப்பு
8. சத்தி	வட்டம்	விட்டம் 1.2 செ.மீ. .4 செ.மீ. (பருமன்)	3 கிராம்	செம்பு		முகப்பில் யானை	வலப்புறம் அங்குசம்
9. சத்தி	வட்டம்	1.2. செ.மீ. .4 செ.மீ. (பருமன்)	3 கிராம்	செம்பு		முகப்பில் எருது	கன்னட "[illegible]" எழுத்து
10. சத்தி	வட்டம்	1.2 செ.மீ. .3 செ.மீ. (பருமன்)	2 கிராம்	செம்பு		முகப்பில் பூட்டிய வில் அம்பு	கன்னட "[illegible]" எழுத்து அங்குசத்துடன்

வடஇலங்கையில் அரசதோற்றமும் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களும்

*ப. புஸ்பரட்ணம்**

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் வடஇலங்கையும் ஒன்றாகும். பாலி இலக்கியங்களில் நாகதீபம், உத்தரதேசம் எனவும், சிங்கள இலக்கியங்களில் தமிழர்தேசம் எனவும் அழைக்கப்பட்ட இப்பிரதேசத்திற்குத் தொன்மையான, தொடர்ச்சி குன்றாத நீண்ட வரலாறு உண்டு. இதன் தனித்துவமே காலப்போக்கில் இதற்கான வரலாற்றிலக்கியங்கள் தோன்றக் காரணமாகும். பண்டைய காலத்தில் இவ்வட்டாரம் பல சிற்றரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போதிலும் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட சுதந்திர அரசு 13–ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியதாக நம்பப்படுகிறது. இதன் தலைநகர் சிங்கை (செகராசசேகரம் : 78), யாப்பாபட்டுன (Gunawardena 1924 : 246), நல்லூர் (யாழ்ப்பாண வைபவமாலை 1953 : 27) எனத் தமிழ், சிங்கள இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. இவை வேறுபட்ட தலைநகரங்களின் கீழ் வட இலங்கை ஆளப்பட்டிருக்கலாம் என்ற பொருளில் உள்ளன. ஆனால் சிங்கையும், யாப்பாபட்டுனவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த நல்லூரையே குறித்ததெனக் கூறும் பேராசிரியர் கா. இந்திரபாலா இத்தலைநகரமே 13–ஆம் நூற்றாண்டில் இருந்து 17–ஆம் நூற்றாண்டுவரை வட இலங்கை அரசின் தலைநகராக விளங்கியதென்றார் (இந்திரபாலா 1972).

சேது மொழி பொறித்த நாணயங்கள் (வெள்ளி)
படம்

இவ்வரசு காலத்தில் பொன், செம்பு, வெள்ளி முதலான உலோகங்களில் நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றுள் செப்பு நாணயங்கள் வகையிலும், தொகையிலும் அதிகமாகும். இவை பற்றி விரிவாகஆராய்ந்த பேராசரியர் சி. பத்மநாதன் நாணயங்களின் எடை, அளவு, சின்னங்கள், வடிவமைப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆறுவகையாகப் பிரித்துள்ளார் (Pathmanathan 1980 : 409-47). பெரும்பாலான நாணயத்தின் முன்புறத்தில் கிரீடம் அணிந்த மன்னன் உருவமும், பின்புறத்தில் நந்தியும், அதன் கீழ் "சேது" என்ற மங்கள மொழியும் இடம் பெற்றுள்ளன. சில நாணயங்களின் முன்புறத்தில் நந்தியும், பின்புறத்தில் எட்டு இதழ் கொண்ட தாமரை மலரும் மத்தியில் "சேது" மொழியும் இடம் பெற்றுள்ளன. எல்லா நாணயங்களிலும் "சேது" என்ற மொழியுடன் செங்கோல், திரிசூலம், வச்சிராயுதம் என்பன பொதுச் சின்னங்களாக இடம்பெற்றுள்ளன. (படம் 1)

மேற்கூறப்பட்ட நாணய வகையில் இருந்து வேறுபட்ட மூன்று நாணயங்கள் 1970 இல் மாதோட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை அரிய நாணயங்கள் எனக் குறிப்பிட்ட தமிழ்நாட்டின் முதன்மை சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் அவர்கள் இரு நாணயங்களின் பின்புறத்தில் தேவநாகரி எழுத்தில் வரும் "ஸ்ரீராஜசேகர" என்ற பெயர் யாழ்ப்பாண மன்னர் பயன்படுத்திய "பரராச சேகரன்". "செகராசசேகரன்" என்ற விருதுப் பெயர்களின் மாற்று வடிவம் எனக் கூறி இவற்றை யாழப்பாண மன்னரே வெளியிட்டதாகச் சுட்டிக் காட்டினார் (Mahadeven 1970 : 111-20). ஆனால் நாணயவியலாளரில் ஒரு சாரார் சேர மன்னர் வெளியிட்டதாகவும் கூறியுள்ளனர் (Seyone 1998 :

* தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

54-3). அண்மையில் கட்டுரை ஆசிரியரால் மேற்கட்டப்பட்ட வகையைச் சார்ந்த 1200 நாணயங்கள் வட இலங்கையில் பூநகரி, மாதோட்டம், கந்தரோடை,

உடுத்துறை போன்ற இடங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் ஐந்து நாணயங்களின் முன்புறத்தில் படுத்திருக்கும் நந்தியும், இடப்புறமாகக் குத்துவிளக்கும், நந்திக்குக் கீழே மூன்று கோடுகளும் பின்புறத்தில் தேவநாகரி எழுத்தில் "ஸ்ரீராஜசேகர" என்ற பெயரும் இடம்பெற்றுள்ளன (படம் 2). இரு நாணயங்களின் முன்புறத்தில் இடப்புறம் திரும்பிய நிலையில் குதிரையும். குதிரையின் முகத்திற்குக் கீழே

(படம் 3)

(படம் 3)

தொட்டியும், இதற்கு இடப்புறமாகக் குத்துவிளக்கும், பின்புறத்தில் மூன்று மீன் சின்னமும், பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன (படம் 3), ஏனைய நாணயங்களின் முன்புறத்தில் நந்தியும், இதன் இருபுறமும் குத்துவிளக்கும், நந்திக்குக் கீழே இரண்டு மூன்று கோடுகளும், பின்புறத்தில் இரண்டு, மூன்று மீன் சின்னமும் இதற்கு இருபுறத்தில் குத்துவிளக்கும் உள்ளன. (படம் 4). இந்நாணயங்களின் அளவு, எடை, சின்னங்கள் அவற்றின் வடிவமைப்பு என்பவற்றைக் கொண்டு முப்பது வகையாகப் பிரிக்கலாம்.

(படம் 3)

இவ்வகை நாணயங்கள் மிக அரிதாகவே தென்னிந்தியா குறிப்பாக தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ளன. ஆனால் இலங்கையில் இவை வகையிலும், தொகையிலும் மிக அதிகமாகவே பல இடங்களில் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டு வம்சங்கள் வெளியிட்ட நாணயங்கள் மிக அரிதாக இலங்கையில் கிடைக்கும் போது, இவை தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டு அங்கிருந்து இலங்கைக்கு வந்ததாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. இவற்றை யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களால் வெளியிடப்பட்டதாகக் கூறுவதும் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் "சேது" மொழி பொறித்த நாணயங்களில் இடம் பெற்றுள்ள நந்தி உருவம், குத்து விளக்கு, பிறைச்சந்திரன் ஆகிய சின்னங்களுக்கும் மீன் உருவம் அல்லது தேவநாகரி எழுத்துப் பொறித்த நாணயங்களில் உள்ள சின்னங்களுக்கும் இடையே வடிவமைப்பில் எந்தவித ஒற்றுமையும் காணப்படவில்லை. மீன் உருவம் பொறித்த நாணயங்களில் "சேது" என்ற மங்கள மொழியே அல்லது தமிழ் எழுத்துகளோ இடம் பெறவில்லை. இந்நாணயங்களில் இடம் பெற்றுள்ள தேவநாகரி எழுத்து கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆனால் "சேது" மொழி பொறித்த நாணயங்கள் 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

இருந்து வெளியிடப்பட்டவை. மேலும் யாழ்ப்பாண அரசுகால நாணயங்களிலும், அரசக்கொடிகளிலும், முத்திரைகளிலும் , ஆவணங்களிலும் "சேது" மொழி மங்களச் சொல்லாகப் பயன்படுத்தியதற்கு இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் சான்றுகள் உண்டு. ஆனால் எந்த இடத்திலும் யாழ்ப்பாண மன்னர் மீனை அரச சின்னமாகப் பயன்படுத்தியதற்குச் சான்றில்லை. இதனால் மீன் சின்னம் பொறித்த நாணயங்களை யாழ்ப்பாண மன்னர் வெளியிட்டதாகக் கூறுவது பொருத்தமாக இல்லை. ஆனால் இவை வட இலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர்களால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதை இக்கால அரசியல் நிகழ்வைக் கொண்டு ஊகிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசு சோழர் வருகையோடு சிங்கை நகருக்கு மாறியதைத் தமிழ் இலக்கியங்களில் சூசகமாகத் தெரிவிக்கின்றன. (யாழ்ப்பாண வைபவமாலை 1953 : 22) இச்சிங்கை நகர் நல்லூரைக் குறித்திருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்பட்டாலும் அதை உறுதிப்படுத்த உறுதியான சான்றுகள் இல்லை. பாலி இலக்கியங்கள் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்கள இராசதானி தெற்கு நோக்கி நகர்ந்த போது வடக்கே கலிங்கமாகன் தலைமையில் அரசொன்று தோன்றியதை மறைமுகமாகக் கூறுகின்றன (Culavamsa 80 : 15-8) கலிங்கமாகனுக்குப் பின் ஆட்சிபுரிந்த சந்திரபானு வடஇலங்கையின் சுதந்திர மன்னனாக இருந்து சிங்கள இராசதானிக்கு எதிராகப் படையெடுத்தான் என மேலும் இந்நூல்கள் கூறுகின்றன. (Culavamsa 88 : 63-4). பாண்டியரின் 1264 ஆம் ஆண்டுக்குரிய குடுமியாமலைக் கல்வெட்டு இலங்கையில் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் உதவிகேட்டதன் பேரில் வீரபாண்டியன் வடஇலங்கை மீது படையெடுத்து ஆட்சியில் இருந்த மன்னனைக் கொன்று தனது இரட்டைக் கயல் பொறித்த கொடியை அங்கே பறக்க விட்டதாகவும், கொல்லப்பட்ட மன்னனின் மகன் பாண்டியரிடம் அடிபணிந்து திறை செலுத்த சம்மதித்ததன் பேரில் அவனை மன்னன் ஆக்கியதாகவும் கூறுகிறது (Nilakanta Sastri 1937 : 59) பின்னர்ப் பாண்டியரே இவ்வரசை ஆண்டதாகவும் தெரிகிறது. இவ்வரலாற்றுச் சம்பவங்கள் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக இன்னொரு அரசு வடஇலங்கையில் இருந்ததைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவ்வரசு வன்னிப் பிராந்தியத்தில் (யாழ்ப்பாணத்திற்கு வெளியே பெருநிலப்பரப்பில்) இருந்திருக்கலாம் என்பதை இவ்வரசுக்குச் சார்பான படைகள், கோட்டைகள் இருந்த இடங்களைக் கொண்டு ஊகிக்க முடிகிறது[(2)]. அதன் தலைநகராகச் சிங்கை இருந்திருக்கலாம் (புஸ்பரட்ணம் 1993 : 113–56).

பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் (செப்பு)

இவ்வரசு பாண்டியரின் மேலாண்மையை ஏற்று ஆட்சி செய்ததுடன், பாண்டியராலும் ஆளப்பட்டதாகத் தெரிகிறது. நாணயங்களில் மீனைப் பொறிக்கும் மரபு இந்திய அரசவம்சங்களால் அவ்வப்போது பின்பற்றப்பட்டாலும், அது பாண்டியரின் குலமரபுச் சின்னமாக இருந்ததென்பதில் சந்தேகமில்லை. இவர்கள் பாண்டிய நாட்டை ஆண்ட போது ஒரு மீன் சின்னத்தையும் திருநெல்வேலியைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தபோது இரண்டு மீன் சின்னத்தையும் தாம் வெளியிட்ட நாணயங்களில் பொறித்ததாகக் கூறப்படுகிறது (3). வடஇலங்கையில் இருந்த அரசு பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்று ஆட்சிபுரிந்ததற்கும், பின்னர் பாண்டியரால் அவ்வரசு ஆளப்பட்டதற்கும் நேரடி, மறைமுகச் சான்றுகள் உண்டு. இதனால் இவ்வரசால் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரண்டு மீன் சின்னத்துடன் இவ்வரசின் வெற்றியைக் குறிக்க மூன்று மீன் சின்னத்தையும் பொறித்தனர் எனக்

கூறலாம். எனவே மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்கள் யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடிக்கு வடஇலங்கையில் இன்னொரு அரசு இருந்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது எனலாம்.

அடிக்குறிப்புகள்

(1) யாழ்ப்பாண அரசு காலத்தில் வெள்ளி நாணயங்கள் வெளியிடப்படவில்லை எனக் கூறப்படுகிறது. ஆனால் அண்மையில் கட்டுரை ஆசிரியரால் யாழ்ப்பாணத்தில் புத்தூர் வட்டாரத்தில் உள்ள மணல்திடல் என்ற ஊரில் செப்பு நாணயங்களுடன் ஒரு வெள்ளி நாணயத்தையும் சேகரிக்க முடிந்தது.

(2) இவ்வரசுக்குச் சார்பாகக் கோட்டைகள், அரசபடைகள் இருந்த இடங்களாகக் கோட்டசாறா, கண்கதரா, காகால (காக்கையன் குளம்), பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்), மகாதீர்த்த (மாதோட்டம்), மன்னாப்பட்டினம் (மன்னார்), புலச்சேரி (பூநகரியில் உள்ள இடம்), வலிகாமம் (மன்னாரில் உள்ள ஓரிடம்), கோணா (பூநகரியில் உள்ள கோணாவில் என்ற இடமாக இருக்கலாம்), மடுபாதபதித்த (இலுப்பைக் கடவை பூநகரிக்கு தெற்கேயுள்ள இடம்), சூறதீர்த்த (ஊர்காவற்றுறை), இவற்றுள் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் ஊர்காவற்றுறையைத் தவிர ஏனைய இடங்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே குறிப்பாக வன்னிப்பிராந்தியத்தில் இருக்கும் இடங்களாக உள்ளன.

(3) உரையாடலின் போது திரு. ஆறுமுக சீதாராமன் கூறிய கருத்து.

உ. சாத்துணை நூல்கள்

1. Culavamsa, 1953 (e.d) Geiger, W. Colombo

2. Gunawardhena, W.A 1924, Kokilasande saya. Colombo.

3. Mahadevan, I. 1970, Some rare coins of Jaffna in Damilica, 1 : 111-20

4. Nilakanta Sastri, K.A. 1937, The Ceylon expedition of Jatavarman Virapandy in Proceedings and transaction of the eight all Indian Oriental Conference, Bangalore.

5. Pathmanathan, S. 1980, Coins of Medieval Sri Lanka : The Coins of the Kings of Jaffna in Spolia Zeylanica, 35 : 409-47.

6. Seyone, K.N.V. 1998, Some Old Coins, Nawala.

7. இந்திரபாலா, கா. 1972, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கண்டி.

8. செகராசசேகரம், 1932, (பதிப்பு) இரகுநாதையர், அச்சுவேலி.

9. புஸ்பரட்ணம், ப. 1993. பூநகரி தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணம்.

10. யாழ்ப்பாண வைபவமாலை, 1953 (பதிப்பு) சபாநாதன், குல, கொழும்பு.

பகோடா நாணயங்கள் - ஓர் ஆய்வு

*முனைவர் ஜெ. ராஜாமுகமது**

தென்னிந்திய நாணயச் செலாவணியிலும், வணிக வரலாற்றிலும் பகோடா (Pagoda) என்னும் பொன் நாணயங்கள் பெருவழக்கிலிருந்தன. 16ஆம் நூற்றாண்டிலிருந்து சுமார் முந்நூறு நூற்றாண்டு காலத்தில் நமது நாட்டிற்கு வந்த ஐரோப்பிய வணிகக் குழுமங்களாலும், நமது நாட்டை ஆண்ட மன்னர்களாலும் பல பெயர்களைக் கொண்ட பகோடா நாணயங்கள் அச்சடித்து வெளியிடப்பட்டன. இவ்வகை நாணயங்களின் வரலாற்று ஆய்வு அறிமுகமே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய வணிகக் குழுமங்களின் வருகைக்குப் பின் நூற்றுக்கணக்கான வகை நாணயங்கள் செலாவணிக்கு வந்தன. பெருகி வந்த வாணிபத்திற்கு இது அவசியமாகிறது. கிழக்குக் கடற்கரையோரப் பட்டினங்களில் போர்த்துக்கீசிய, டச்சு, ஆங்கிலேய, பிரெஞ்சு, டேனிஷ் நாட்டு வணிகக் குழுமங்கள், பண்டகசாலைகள் அமைத்து வாணிபம் செய்து வந்தனர். தங்களது பண்டகசாலையிலிருந்து, இத்தகைய நாணயங்களை, அப்பகுதியின் ஆட்சியாளர்களின் அனுமதியுடன் அச்சிட்டு வெளியிட்டனர். நமது நாட்டு மன்னர்களும், சிற்றரசர்களும் கூட இத்தகைய நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இக்கால பொன் நாணயங்கள் பகோடா, பணம், காசு என அழைக்கப்பட்டது. இவற்றுள் பகோடா மொத்த வணிகத்தில் மிக முக்கிய இடம் வகித்தது.

பகோடா நாணயங்கள் பெரும்பாலும் அவை அச்சடிக்கப்பட்ட நாணயச் சாலைகளின் பெயரால் அழைக்கப்பட்டன, நாகப்பட்டினம், (நாகப்பட்டினம் பகோடா) பரங்கிப்பேட்டை, மதராஸ், தூத்துக்குடி, பழவேற்காடு, தரங்கம்பாடி, தெக்னாபட்டினம், கடலூர், கொரமண்டல், மசூலிப்பட்டினம், மங்களூர், ஆலம்பாரம், சத்ராஸ், பாண்டிச்சேரி போன்ற ஊர்ப் பெயர்கள் தாங்கிய பகோடா நாணயங்களும் பரங்கி, சுல்தானி, ஸ்டார், முகமதுகான், கலியுகராமன், புதுமின்னல் போன்ற பெயருள்ள நாணயங்களும், தென்னிந்தியாவில் செலாவணியிலிருந்தன.

ஐரோப்பியரின் வருகையால் தென்னிந்தியக் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் பெருகியது. ஏற்றுமதி அதிகமாகவும், இறக்குமதி குறைவாகவும் இருந்தது. இதைச் சமன் செய்ய ஐரோப்பிய வணிகக் குழுமங்கள் தங்கம், வெள்ளி உலோகங்களைப் பெருமளவில் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்து நாணயங்கள் அச்சடித்துப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தனர். ஐரோப்பிய வணிகக் குழுமங்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டு பகோடா நாணயங்களை அச்சடித்து தங்களது வாணிபத்தில் பயன்படுத்தினர். கடல் கடந்த நாட்டு வாணிபம் பகோடாவிலேயே நிர்ணயம் செய்யப்பட்டது. நமது நாட்டு வணிகர்களும் பகோடா நாணயங்களையே பெரிதும் விரும்பினர். ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக் குழுமம் தங்களது வணிகக் கணக்கையும், பின்னர் வருவாய் நிர்வாக கணக்கையும் பகோடா நாணயத்திலேயே எழுதி வைத்திருந்தனர்[2].

ஐரோப்பியரின் வருகைக்கு முன் விஜயநகர மன்னர்களின் ஆட்சியில் பொன், சக்கரம், வராகன் போன்ற பொன் நாணயங்கள் செலாவணியிலிருந்தன. இவற்றுள் வராகன் கி.பி.6, 7ஆம் நூற்றாண்டில் சாளுக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நாணயங்களில் ஒரு பக்கம் வராக உருவம் பொறிக்கப்பட்டிருந்ததால் இப்பெயர் பெற்றது. (இச்சொல் பொன் வணிகர்களிடையே இன்றும் வழக்கிலிருப்பது குறிப்பிடத் தக்கது). இத்தகைய பொன் நாணயங்களையே ஐரோப்பியர் 'பகோடா' என அழைத்தனர். பகோடா என்ற சொல் எப்படி வந்தது என விளங்கவில்லை. பழமையான பொன் நாணயங்களுள் பகோடா என்ற சொல் வழக்கில்லை[3]. ஆரம்ப காலத்தில், கோபுர உருவத்துடன்

* காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை.

இத்தகைய சில நாணயங்களைக் கண்ட ஐரோப்பியர் இவற்றைப் பகோடா எனப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர் எனக் கொள்ளலாம்.

இச்சொல் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் இருந்தே போர்த்துக்கீசியரின் வணிகப் பதிவேடுகளில் காணப்படுகிறது.[4]

போர்த்துக்கீசியர் 1510–இல் பர்தோ (Pardao douro) என்னும் பொன் நாணயத்தைத் தென்னியந்தியாவில் செலாவணிக்கு அறிமுகப்படுத்தினார். இதைப் பகோடா என்ற பெயராலும் அழைத்தனர். ஆனால் இதில் ஒரு பக்கம் போர்த்துக்கீசிய அரசு முத்திரையும் மறுபக்கம் புனித தாமஸ் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தது.[5]

1639–இல் ஆங்கிலேயர் சென்னைப்பட்டினத்தைக் குத்தகைக்குப் பெற்ற போது நாணயங்கள் அச்சிடும் உரிமையையும் பெற்றனர்.[6] ஆனால், இந்து மன்னர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக இந்த நாணயங்களில் இந்துக் கடவுள் உருவங்களே பொறிக்கப்பட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்நாட்டு வணிகர்களும் இத்தகைய நாணயங்களை வணிக நடவடிக்கைகளில் எளிதாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட நிபந்தனையை ஒப்புக் கொள்ள ஆங்கிலேயர் தயங்கவில்லை.[7]

கடவுளின் உருவங்களுடன் வெளியிடப்பட்ட நாணயங்கள், ஒரு சாமி பகோடா, இரண்டு சாமி பகோடா, மூன்று சாமி பகோடா என அழைக்கப்பட்டது, ஒரு சாமி பகோடாவில் ஒரு பக்கம் விஷ்ணு உருவமும், இரண்டு சாமி பகோடாவில் ஒரு ஆண், ஒரு பெண் தெய்வ உருவமும் (சிவனும், பார்வதியும் அமர்ந்த கோலத்தில் உள்ள இரண்டு சாமி பகோடா நாணயங்களை ஹைதர் அலி வெளியிட்டுள்ளார்) மூன்று சாமி கோடாவில் விஷ்ணு, நிலமகள் திருமகள் – மூவருடைய – உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயர், சென்னை, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து இத்தகைய நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். இதே பாணியில் டச்சுக்காரர்கள் நாகப்பட்டினர், பழவேற்காடு, பரங்கிப்பேட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்தும், தரங்கம்பாடியிலிருந்து டேனிஷ்காரர்களும், பாண்டிச்சேரியிலிருந்து பிரெஞ்சுக்காரர்களும் பகோடா நாணயங்களை அச்சடித்துத் தங்களது வாணிபத்திலும், பொதுவான செலாவணியிலும் பெருமளவில் பழக்கத்திற்குக் கொண்டு வந்தனர்[8]. இதே காலத்தில் ஆற்காடு நவாபும் செஞ்சி நாயக்கர்களும் இதேபோன்ற நாணயங்களை அச்சிட்டனர். 1705–ல் பிரெஞ்சு வணிகக் குழுமம் இந்து கடவுளரின் உருவத்துடன் பகோடா நாணயங்கள் வெளியிடுவதை மைலாப்பூரிலிருந்த கிறித்துவ பாதிரிமார்கள் எதிர்த்தனர். ஆனால், பர்சிரிலிருந்த குழும இயக்குனர்கள் இந்த எதிர்ப்பை நிராகரித்தனர்.[9] ஏனாம் பகுதியில் செலவாணியிலிருந்த பகோடா நாணயங்களில் பிரெஞ்சுக்காரர்கள் பிறைச்சந்திரன் உருவம் பொறித்திருந்தனர்.

பகோடா நாணயத்தின் எடையும், மாற்றும் இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப பலவாறாக மாறுபட்டிருந்தது. ஆங்கிலேயரின் பகோடா நாணயங்கள் 18ஆம் நூற்றாண்டில் 20 3/4 காரட் மாற்று இருந்தது. பின்னர் இது 19 காரட்டாக குறைக்கப்பட்டது. இக்காலத்தில் ஆர்காடு நவாப் வெளியிட்ட பகோடா 18 காரட் மட்டுமே இருந்தது.[10] இந்த நாணயங்களின் செலாவணி மதிப்பு வீழ்ந்து விடாமலிருக்கவும், தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்யவும், இவை இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடிக்கடி தர நிர்ணயம் செய்யப்பட்டது. 1676–ல் டச்சுக்காரர் நாகபட்டினத்தில் அச்சடித்த நாணயம் 20 காரட்டாக இருந்தது. ஆனால், இது 1770–ல் இது 18 காரட்டாக குறைந்து விட்டது. ஆகவே, பழைய பகோடா நாணயங்களுக்கு வணிகத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. 18–ம் நூற்றாண்டின் இறுதியில் 100 பழைய பகோடாவின் மதிப்பு 190 புதிய பகோடாவாக இருந்தது.[12] இவற்றுள் பரங்கிப்பேட்டை, பழவேற்காடு பகோடா நாணயங்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. ஆங்கிலேயரின் இருசாமி பகோடா 6.00 கிராம் எடையும், ஸ்டார் பகோடா (ஒரு சாமி) 4.00 கிராம் எடையும், பரங்கிப்பேட்டை ஒரு சாமி

பகோடா 4.00 கிராம் எடையும் உள்ளதாக இருந்தன. (புதுக்கோட்டை அருங்காட்சியக நாணயங்களுள் சில).

பகோடா நாணயங்களே வணிகச் செலாவணிக்கு பெரிதும் தேவைப்பட்டதால், ஒரு ஐரோப்பிய வணிகக் குழுமத்தில் பகோடா நாணயம் கையிருப்பு இல்லாத போது தங்களிடமிருந்த தங்கள் நாட்டுப் பொன், வெள்ளி நாணயங்களைப் பிற குழுமங்களிடமும் விற்று அவற்றிற்குப் பதிலாக அந்தந்தப் பகுதிக்குத் தேவையான பகோடா நாணயங்களை வாங்கினர். இப்படி வழங்கப்பட்ட பிற குழும நாணயங்களில் தங்களது முத்திரையைப் பதித்துச் செலாவணிக்குக் கொண்டு வந்தனர். ஆங்கிலேயரும், டச்சுக்காரரும் தங்களது வாணிபத்திற்குத் தேவையான பகோடா நாணயங்களை இம்முறையில் வாங்கிய விபரம் அவர்களது வணிகப் பதிவேடுகளில் காணப்படுகின்றன.[13]

பகோடா நாணயங்கள் தயாரிக்க ஆன செலவுகள் குறித்த விபரங்களையும், ஐரோப்பியரின் வணிகப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. 1675 வாக்கில் டச்சுக்காரர், நாகப்பட்டினம் நாணயச்சாலையில் 1000 பகோடா அச்சடிக்க ஆன செலவு விபரம் : பொற்கொல்லர் கூலி 7 பகோடா, நாகபட்டினம் கோயில் மகமை 3 பகோடா, நாணய மதிப்பீட்டாளர் கூலி 2 பகோடா, கரி போன்ற எரிபொருள் 1,2 பகோடா, டச்சு குழும லாபத்திற்காக 7 1,2 பகோடா தஞ்சாவூர் மராட்டிய மன்னர் 7 1,2 பகோடா (டச்சுக்காரரும், தஞ்சாவூர் மராட்டிய மன்னரும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி நாணய அச்சடிப்பு வருமானத்தில் பாதி மராட்டிய மன்னருக்கு அளிக்கப்பட வேண்டும்) இந்த நடைமுறையும் செலவும் இடத்திற்கு இடம் மாறுபட்டது.[14]

இவ்வாறாகப் பகோடா பொன் நாணயங்கள் தென்னிந்தியப் பொருளாதார வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு வரை மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்ததைத் தெரிந்துகொள்ள முடிகிறது. விரிவானதொரு ஆய்வுரை மேலும் பல சுவையான செய்திகளைத் தமிழகப் பொருளாதார வரலாற்றிற்கு அளிக்கும் எனக் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. H.W. Gordrington, Ceylon Coins and Currency (Colombo 1926)p. 284.
2. S. Arasarathnam, Merchants, Campanies, and Commerce on the Coromandel Coast 1650-1740. Delhi 1986, p.312.
3. T. Desikachari, South Indian Coins, 1933 (Rpt. 1984) New Delhi p. 91.
4. Godrington op.cit.p. 92.
5. Ibid.
6. Tamil Nadu Archives - Letter to Fort St. George 1682 Vol. II p.1 ; H.D. Love, Vestiges of Old Madras Vol. I.p.17.
7. T. Desikachari, op. cit. p.90
8. Walter Elliot, Coins of South India, (1886) (Rept. Delhi 1975) p. 129 ; Godrington opt. cit. p. 172.
9. T. Desikachari, op. cit. p.94.
10. Elliot, op. cit.p. 179.
11. Tamil Nadu Archives, Despatches from England 1670-77, 24 December, 1675. p.32.
12. S. Arasaratnam, op. cit. 295.
13. Colombo Archives - Dutch Records. 3-D, August 2 1664 ; T. Desikachari op. cit. p. 85 ; S. Arasaratnam op. cit. p. 298.
14. S. Arasaratnam op. cit. p. 304.

தஞ்சை இரகுநாத நாயக்கர் காசுகள்

- ஆறுமுக சீதாராமன்*

விஜயநகரப் பேரரசுக்குத் தூண்கள் போல் அமைந்தவர்கள் தஞ்சை நாயக்கர்கள். தஞ்சை நாயக்கர்களின் வரிசையில் மிகச் சிறப்பித்துக் கூறப்படும் தகுதியைப் பெற்றவர் இரகுநாத நாயக்கராவார். இவரது ஆட்சிக்காலமே தஞ்சையை ஆண்ட நாயக்கர்கள் ஆட்சியின் பொற்காலமாகும்.

விஜயரகுநாதன் (கி.பி. 1600–1645) தமிழ், தெலுங்கு, நாகரி எழுத்துகளுடன் வெளியிட்ட செப்புக் காசுகள் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் கிடைத்துள்ளன. தமிழ் எழுத்து காசுகளில் 'ராயரகுனாதன்' 'விசையரகுனாதன்', தெலுங்கு எழுத்துக் காசுகளில் ஸ்ரீகுணாத, ரகுணாத, நாகரி எழுத்துக் காசில் 'ரகுநாத' என்று பொறிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய நாணயவியல் வரலாற்றில் எந்த ஒரு மன்னனும் மூன்று மொழிகளில் தனித்தனியாகக் காசுகள் அச்சடித்து வெளியிட்டதற்கான சான்றுகளோ அல்லது காசுகளோ இன்று வரை கிடைக்கவில்லை. ஆனால் தஞ்சை இரகுநாத நாயக்கர் மும்மொழிக் காசுகளை வெளியிட்டுள்ளது சிறப்பானதாகும்.

இரகுநாதன் வெளியிட்டுள்ள காசுகளில் பலவகையான தமிழ் எழுத்துக் காசுகள், தெலுங்கு எழுத்துக் காசுகள் கிடைத்துள்ளது. நாகரி எழுத்துக் காசு ஒருவகை மட்டும் தான் கிடைத்துள்ளது.

இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள அனைத்துக் காசுகளும் என்னுடைய களப்பணியில் சேகரிப்பட்டவையாகும். கிடைத்த காசுகளைப் பற்றிய அனைத்துக் கருத்துகளும் கீழ்வரும் கட்டுரையில் புகைப்படத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

காசுகளின் வகைகள் :

தமிழ்க் காசுகள் :

முதல் வகை :

காசின் முன்பக்கத்தில் திருமகள் ஒரு பீடத்தின் மேல் அமர்ந்த நிலையிலும், பின்பக்கத்தில் நான்கு வரிகளில் 'விசைய ரகுனாதன்' என்று தமிழ் எழுத்துகள் உள்ளன.

காசின் எடை – 2.8 கிராம்

கிடைத்த இடம் – பாபநாசம்.

முன்பக்கம்

பின்பக்கம்

இரண்டாம் வகை :

காசின் முன்பக்கத்தில் திருமகள் நின்ற நிலையிலும், பின்பக்கத்தில் மூன்று வரிகளில் 'விசையரகுனாத' என்று தமிழ் எழுத்துகள் உள்ளன.

காசின் எடை – 2.7 கிராம்

கிடைத்த இடம் – அரியலூர்.

முன்பக்கம்

பின்பக்கம்

* நாணயங்கள் சேமிப்பு ஆய்வாளர், தஞ்சை.

மூன்றாம் வகை :

காசின் முன்பக்கத்தில் திருமகள் (லட்சுமி) அமர்ந்த நிலையிலும், பின்பக்கத்தில் நான்கு வரிகளில் 'விசையரகுனாதன்' என்று தமிழ் எழுத்துகள் உள்ளன.

காசின் எடை – 2.7 கிராம்

கிடைத்த இடம் – திருவையாறு.

முன்பக்கம்

பின்பக்கம்

நான்காம் வகை :

காசின் முன்பக்கத்தில் சிவலிங்கத்திற்குப் பால் பொழியும் பசுவின் உருவமும், பின்பக்கத்தில் 'ராயரகுனாதன்' என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்துகள் உள்ளன.

காசின் எடை – 2.8 கிராம்,

கிடைத்த இடம் – கும்பகோணம்.

முன்பக்கம்

பின்பக்கம்

தெலுங்கு காசுகள்

ஐந்தாம் வகை :

காசின் முன்பக்கத்தில் சிவன் பார்வதி அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் 'ரகுணாத' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் உள்ளது.

காசின் எடை – 3.5 கிராம்.

கிடைத்த இடம் – தஞ்சாவூர்.

முன்பக்கம்

பின்பக்கம்

ஆறாம் வகை :

காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் யானை உள்ளது. பின்பக்கத்தில் 'ரகுணாத' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் உள்ளது.

காசின் எடை – 3 கிராம்

கிடைத்த இடம் – தஞ்சாவூர்.

முன்பக்கம்

பின்பக்கம்

ஏழாம் வகை :

காசின் முன்பக்கத்தில் வலப் பக்கம் நோக்கி அமர்ந்திருக்கும் காளையும், காளையின் மேலே சூரியன், சந்திரன் உள்ளன. பின்பக்கத்தில் 'ஸ்ரீரகுணாத' என்று மூன்று வரிகளில், தெலுங்கு எழுத்தில் உள்ளது.

காசின் எடை – 2.7 கிராம்

கிடைத்த இடம் – கும்பகோணம்.

முன்பக்கம்

பின்பக்கம்

எட்டாம் வகை :

காசின் முன்பக்கத்தில் கண்ட பேருண்ட பறவையும், பின்பக்கத்தில் 'ஸ்ரீரகுணா(த)' என்று இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்தில் உள்ளது.

காசின் எடை – 2.9 கிராம்

கிடைத்த இடம் – தஞ்சாவூர்.

முன்பக்கம்

பின்பக்கம்

நாகரி காசு :

ஒன்பதாம் வகை :

காசின் முன்பக்கத்தில் அமர்ந்த நிலையில், சிவன், பார்வதியும் பின்பக்கத்தில் 'ரகுநாத' என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது.

காசின் எடை – 3.2. கிராம்

கிடைத்த இடம் – கும்பகோணம்.

முன்பக்கம்

பின்பக்கம்

இக்காசுகளிலிருந்து மன்னன் பெயர், சமயம், வணங்கிய தெய்வம், மொழி, எழுத்தின் வளர்ச்சி ஆகிய பல முக்கியச் செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது.

பிரகலாதன் கதை சொல்லும் "இராணி மங்கம்மா" செப்புக் காசு

*சங்கரன் ராமன் **

முன்பக்கம்

பின்பக்கம்

அண்மையில் "ஸ்ரீ மங்கம்மா" என்ற தெலுங்கு எழுத்துடன் கூடிய வட்ட வடிவமான செப்புக்காசு மதுரையில் கிடைத்துள்ளது. இதன் எடை 2.5 கிராம். இக்காசின் ஒரு பக்கத்தில் நரசிம்மரின் மடியில் ஒரு மனித உருவம் படுத்திருந்த நிலையிலும், நரசிம்மர் அந்த மனித உருவத்தின் வயிற்றுப் பகுதியைக் கிழிப்பது போன்றும் உள்ளது. இக்காசின் மறுபக்கம் புள்ளிகளுடன் கூடிய கட்டிடத்தின் நடுவில் "ஸ்ரீ மங்கம்மா" என்று தெலுங்கு எழுத்து உள்ளது. இந்தக் காசில் உள்ள காட்சியைக் காணும் பொழுது மிகவும் புகழ் பெற்ற பக்தப் பிரகலாதன் கதை நினைவுக்கு வருகிறது.

கோயில் சிற்பங்களில் உள்ள உருவங்கள் பண்டைய காலக் காசுகளில் அதிகம் இடம் பெற்றுள்ளன. ஆனால் திருமாலின் அவதாரத்தின் கதை ஒன்றை நினைவூட்டும் வகையில் வெளியிட்ட காசு இப்பொழுதுதான் கிடைத்துள்ளது.

அண்மையில் நரசிம்மர் உருவம்[1] பொறிக்கப்பட்ட சில காசுகளைப் பற்றிச் செய்திகள் கிடைத்துள்ளன. ஆனால் பக்த பிரகலாதன் கதையை நினைவூட்டும் வகையில் உள்ள இந்தக் காசு "இராணி மங்கம்மா" வெளியிட்டுள்ள காசுகளில் மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

மேலும் இராணி மங்கம்மாவின் காசுகளில் நரசிம்மரும், லக்ஷ்மியும் அமர்ந்த நிலையிலும், நரசிம்மர் தனியாக அமர்ந்த நிலையிலும், நரசிம்மர் தலையும் சிங்க உடலும் கூடிய உருவம் உள்ள காசுகளும் கிடைத்துள்ளன. இதிலிருந்து இராணி மங்கம்மாள் காலத்தில் வைணவம் தழைத்தோங்கி இருந்தமையைத் திருமால் அவதாரக்காட்சிகள் கோயில்களில் மட்டும் இல்லாமல் அவர் வெளியிட்ட காசுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளதை வைத்து அறிய முடிகிறது.

அடிக்குறிப்பு

சங்கரன் ராமன் "இராணி மங்கம்மாவின் செப்புகாசு"
Madras Coin Society Special Bulletin 1998 Page No. 18

* பொருளாளர். சென்னை நாணயவியல் கழகம்.

"உய்யக்கொண்டான்" பெயரில் இராஜராஜன் வெளியிட்ட அரிய பொற்காசு

சங்கரன் ராமன் *

முன்பக்கம்

பின்பக்கம்

மதுரையில் 700 மில்லி கிராம் எடையுள்ள ஒரு வட்டவடிவப் பொற்காசு அண்மையில் கிடைத்துள்ளது. இக்காசின் முன்பக்கத்தில் நின்ற நிலையில் மனித உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நின்ற மனிதனின் இடது கையில் பூவும் வலது கை தொங்கும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இந்த மனிதனின் இடது பக்கம் விளக்கு ஒன்றும் காணப்படுகிறது. இக்காசின் பின்பக்கம் தேவநாகரி எழுத்தில் "உ(ய்)யக் கொண்ட" என்று இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்திற்கு மேலே படுக்கைவாட்டில் சங்கு பொறிக்கப்பட்டுள்ளது.

"உய்யக் கொண்டான்" என்ற பெயர் சோழப் பெருவேந்தன் முதலாம் இராஜராஜனுடைய விருதுப் பெயர்களில் ஒன்றாகும்[1] "உய்யக் கொண்டான்" என்பதற்குக் "காப்பவன்" என்று பொருள்.

முதலாம் இராஜராஜன் தமது ஆட்சிக்குப்பட்ட பகுதிகளைப் பல வளநாடுகளாகப் பிரித்தார். அவற்றுள் ஒன்று "உய்யக் கொண்டான் வளநாடு". இந்த வளநாடு வடக்கில் காவேரிக்கும் தெற்கில் அரிசில் ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியாகும்[2]. மேலும் தஞ்சை திருச்சி சாலையில் உள்ள ஒரு ஊர் "உய்யக் கொண்டான் திருமலை" என்று முதலாம் இராஜராஜனின் விருதுப் பெயரால் இன்றும் அழைக்கப்படுகிறது.

திருச்சிக்கு அருகில் காவேரி நதியின் கால்வாய்களுள் ஒன்று "உய்யக் கொண்டான் கால்வாய்". இது முதலாம் இராஜராஜன் காலத்தில் வெட்டப்பட்ட கால்வாயாகயிருக்கலாம். மேலும் காவேரியின் கிளை நதிகளில் ஒன்று "உய்யக் கொண்டான் ஆறு" எனக் கூறப்படுகிறது. முதலாம் இராஜராஜனின் பல அலுவலர்கள் "உய்யக் கொண்டான்" என்று சிறப்பு பெயர்கள் பெற்றிருந்தனர்.

சென்னை அருகில் உள்ள "பூவிருந்தவல்லி" என்ற ஊரின் பெயரும் "உய்யக் கொண்டான் சதுர்வேதி மங்கலம்" என்று முதலாம் இராஜராஜன் காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள "சோழவரம்" என்ற ஊர் முதலாம் இராஜராஜன் காலத்தில் "உய்யக்கொண்டான் சோழபுரம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. முதலாம் இராஜராஜனின் படைப்பிரிவு ஒன்றும் "உய்யக் கொண்டான் தெரிஞ்சபடை" என்று கூறப்பட்டது.

இம்மன்னின் விருது பெயர்களில் "ஜெயசோழ"[3], "இரவிகுலமாணிக்கம்"[4] என்ற பெயர்களில் வெளியிட்ட காசுகளைப் பற்றி நமக்கு தெரியவந்துள்ளது.

"உய்யக் கொண்டான்" என்ற விருதுப் பெயரில் வெளியிட்ட பொற்காசு இப்பொழுதுதான் முதல் முறையாக தமிழகத்தில் கிடைத்துள்ளது. முதலாம் இராஜராஜன் வெளியிட்ட இக்காசு ஒரு சிறப்பு வெளியீடாகும்.

சோழர்காலத்தில் பொற்காசுகள் மாடை என்று வழங்கப்பட்டன. முதலாம் இராஜராஜன் காலத்து பொற்காசுகளில் இதுவரை "ஸ்ரீ இராஜராஜன்" என்ற பெயர் பொறிக்கப்பட்ட காசுகள் தாம் அதிகம் கிடைத்துள்ளது. 36 விருதுப் பெயர்களை உடைய முதலாம் இராஜராஜன் காலத்தில் "உய்யக் கொண்டான்" என்ற விருது பெயர் சிறப்பானதாக விளங்கி இருக்க வேண்டும் என்பது இக்காசின் வெளியீட்டின் மூலம் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. "தென் இந்தியக் கல்வெட்டு" தொகுதி 2, பக்கம் 39
2. Subbarayalu Y. Political Geography of Chola Country, Page 59.
3. Brajadulal, Chattopadhyaya, Coins Currency systems in South India, Page 250.
4. ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், பக்கம் 25.

இரண்டாம் நரசிம்வர்மனின் வெள்ளிக் காசு

*சங்கரன் ராமன் **

முன்பக்கம்



பின்பக்கம்

1.4 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிக்காசு அண்மையில் தஞ்சாவூர் அருகில் கிடைத்துள்ளது. இக்காசின் முன்பக்கம் காளையின் மேல் "ஸ்ரீநிதி" என்ற பல்லவர் கிரந்த எழுத்துப் பொறிப்பு காணப்படுகிறது. இக்காசின் பின்பக்கம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்துக்குள் வண்டிச்சக்கரம் போன்று ஆரங்கள் பிரிக்கப்பட்டு காணப்படுகிறது.

முன்பக்கம் உள்ள "ஸ்ரீநிதி" என்ற சொல்லுக்கு செல்வமுடையவன் என்று பொருள். இதற்கு முன்பு காளையின் மேல் "ஸ்ரீநிதி" என்ற எழுத்தும் பின் பக்கம் "ஸ்வஸ்திக்"[1] சின்னமும் உள்ள பல்லவர் காசு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது கிடைத்துள்ள காசில் "ஸ்ரீநிதி" என்ற எழுத்தும் "ஸ்வஸ்திக்" வடிவம் உள்ள காசில் உள்ள "ஸ்ரீநிதி" என்ற எழுத்தும் தொல்லெழுத்தியல் அடிப்படையில் ஒரே காலத்தைச் சார்ந்தவை. எனவே புதியதாகக் கிடைத்துள்ள இந்த காசும் இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 690–729)[2] காலத்தில் வெளியிடப்பட்ட காசு என உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட காசில் "ஸ்வஸ்திக்" சின்னத்திற்குப் பதிலாக ஆரம் போடபபட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

